# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா

முனைவர் ம. பிரகாஷ்

தமிழ்த்துறை (சுயநிதி)
என். ஜி. எம். கல்லூரி
பொள்ளாச்சி.

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

**பதிப்பாசிரியர்கள்**

முனைவர் ந. ஜெயசுதா
முனைவர் ம. பிரகாஷ்

**தமிழ்த்துறை**
**நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி**
(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'ஏ' தகுதி ஐ.எஸ்.ஓ. 9001:2015 தரச்சான்றிதழ் பெற்றது)
பொள்ளாச்சி - 642 001

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


பதிப்புக்குழு

முனைவர் த.பரமேசுவரி(துறைத்தலைவர்),
முனைவர் த. கீதாஞ்சலி,
முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா,
முனைவர் ம. சித்திரகலா, முனைவர் ந. பிரகாஷ்,
முனைவர் மு. சுகந்தி, முனைவர் இரா. ஜெயந்தி,
பேரா. ர.சூர்யா, பேரா. அ. மகபுபு.



முதற்பதிப்பு : டிசம்பர், 2018

வெளியீடு : டுடே பதிப்பகம்
192, பெல்ஸ் சாலை,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

கணினி : டுடே கிராபிக்ஸ்

அச்சாக்கம் : டுடே பிரிண்டர்ஸ்
14/192, பெல்ஸ் ரோடு,
எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ், சென்னை-05.
அலைபேசி:98400 83738 / 044-2855 3797

பக்கங்கள் : xxiii + 483 = 506

விலை : ரூ.420/-

ISBN : 978-93-87882-47-8

33. திருமுருகாற்றுப்படையில் இறைநெறி
முனைவர் யு. துர்காதேவி 209
34. இருக்க இயலாத இறைநெறிகள்
Dr. K.I.N. DEIVA AKANDAN ARAMAN 215
35. அறநெறியின் இறைநெறிகள்
திருக்குறள் தூதர் சு. நடராசன் 222
36. திருக்குறள் உணர்த்தும் இறையியல் கோட்பாடு
முனைவர் நயம்பு.அறிவுடைநம்பி 227
37. குறிஞ்சி நிலத் தெய்வம்
த. நர்மதா தேவி 235
38. நாகூர் ரூமியின் சிறுகதைகளின் வழி காணப்படும் இசுலாமியக் கருத்துகள்
கா. நஸ்ரீன் பாத்திமா 240
39. தமிழ் இலக்கியத்தில் முருகவழிபாடு
அ. நித்யா 245
40. இராமனின் இறைநெறிக்கொள்கை
முனைவர் வெ. நிர்மலா 250
41. சமணம் சுட்டும் இறைநெறி
முனைவர் ஜெ. நீலாக்சி 258
42. பாரதியாரின் இறைநெறி
முனைவர் எ. பச்சையப்பன் 262
43. திருப்பாவையில் இறைநெறி
வீ. பவானி 271
44. இறைநெறியில் புதுக்கவிதை – ஓர் ஆய்வு
முனைவர் கோ.வ. பரத்வாஜ் 278
45. திருமுருகாற்றுப்படை – சுவையும் சொல்லாக்கமும்
முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன் 283
46. வைணவ இலக்கியத்தில் ஆண்டாளின் இறைநெறி
முனைவர் ச. பாக்கியலஷ்மி 299
47. திருமூலர் கூறும் துறவு மார்க்கம்
முனைவர் ஜீ. பாண்டியலட்சுமி 305
48. பரிபாடலில் திருமால் செவ்வேள் வழிபாடு – ஓர் ஒப்பீடு
இரா. பிரகாஷ் 312

# 37. குறிஞ்சி நிலத் தெய்வம்

**த. நர்மதா தேவி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642001.

பழந்தமிழ் நூல்களிலே பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஒரு சிறந்த நூலாகும். பண்டைத் தமிழர் நாகரிகத்தை விளக்கிக் காட்டும் ஒளிவிளக்கு சங்க இலக்கியமாகும். அவற்றுள், முருகனின் தொன்மங்கள் மேலோங்கி காணப்படுகிறது. இன்னும் தமிழ் மக்களின் சமய வாழ்கையில் முருக வழிபாடு பெருமை மிக்க ஒரிடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தியில் உள்ள ஆதிச்சநல்லூரில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழி தாழிகளில் முருகனுக்கு காவடி எடுப்போர் பயன்படுத்தும் வாய்க்கூடுகள் போன்ற தங்க வாய்மூடிகளும் இரும்பால் ஆன திரிசூலங்களும் இருந்தன. இத்திரிசூலங்களில் சேவல் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது என்பர் வரலாற்றிஞர் க.நீலகண்ட சாஸ்திரியார் ஆதிச்சநல்லூர் புதைகுழிகளின் காலம் கல்லும் உலோகமும் கலந்த கருவியை பயன்படுத்தும் பெருங்கற்படைக்காலம் ஆகும். ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ள சான்றுகளிலிருந்து முருக வழிபாடு பழங்கற்காலம் தொடங்கி நிலவி வந்துள்ளமை அறியமுடிகிறது.

**முருகன்**

முருகன் என்னும் சொல் **'முருகு'** என்னும் சொல்லிலிருந்து உருவாககப்பட்டது. முருகு என்னும் சொல்லுக்கு **அழகு, இளமை, தெய்வம் மணம், வேள்வி** என்னும் பல்வேறு பொருள்கள் கூறப்படுகிறது. முருகு என்னும் பண்புச்சொல்லோடு, ஆண்பால் காட்டும்(அன்) விகுதியை சேர்த்து (முருகு அன்) **'முருகன்'** என்னும் சொல் உருவாக்கப்பட்டுள்ளது.

## கோவில்கள்

சங்க காலத்திலே இன்றிருப்பது போன்ற பெரும் கோவில்கள் இல்லை. சிறு சிறு கோவில்கள் இருந்தன. அக்காலத்து மக்கள் எங்கும் தெய்வமிருப்பதாகவே நம்பினர். ஆகையால் அவர்கள் இயற்கை வனப்பமைந்த எல்லா இடங்களிலும் தெய்வத்தை வணங்கி வழிபட்டனர். அருவ வழிபாடும் உண்டு. உருவ வழிபாடும் உண்டு.

### உருவ வழிபாடு

உருவ வழிபாடு தமிழ் நாட்டிலேதான் தோன்றியிருக்க வேண்டும். சங்க நூல்களில் எல்லாம் உருவ வழிபாடு காணப்படுகிறது. தமிழர்களின் பழைய நாகரிகத்திலிருந்தே உருவ வழிபாடு தோன்றியது என்று சொல்ல இடமுண்டு. பண்டையத் தமிழர்கள் போரிலே மாண்ட வீரர்களைப் போற்றினர். அவர்களுக்காகக் கல் நட்டு விழா செய்தனர். அவர்களுடைய புகழைப் பாடினர்.

வீரர்களுக்காகக் கல் நாட்டு விழா செய்யும் முறையை இலக்கியத்திலும் காணலாம். வீரர்களுக்கு உருவமைத்து அவர்கள் கடவுளர்களுக்கும் கற்சிலையும் செய்து வைத்து வணங்கினர். கடைச்சங்க காலத்தில் இவ்வழக்கம் தமிழ் நாடெங்கும் பரவியிருந்தது. தமிழர்கள் சிற்பக்கலையிலே சிறந்து நின்றமைக்கு இவ்வுருவ வணக்கம் ஒரு காரணமாகும். இது குறிப்பிடத்தக்கது. பண்டையத் தமிழர்கள் முருகனை ஆறுமுகம் பன்னிரண்டு கையும் உடைய உருவமாகச் செய்து வைத்து வணங்கினர்.

### தமிழ்க் கடவுள் முருகன்

தமிழர் வணங்கிய தெய்வங்களில் மிகவும் பழமையானது முருகனே. தொல்காப்பியத்தில் குறிஞ்சி நிலத் தெய்வத்தை **'சேயோன் மேய மைவரை உலகமும்'** என அழைக்கப்படுகிறது. **'சேயோன்'** என்றால் தூரத்தில் இருப்பவன் என்று பொருள் உண்டு. **முருகன்** அல்லது **செம்மையானவன்** என்ற பொருளில் இப்பெயர் வழங்கியிருக்கலாம் மேலும் தொல்காப்பியத்தில்

**வெறிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**

**(தொல்-பொருள்.1006)**

வெவ்வாய் வேலன் என்பது வெம்மையான வாயை உடையவன் என்ற பொருளில் அமைகிறது. **வேலன்** என்னும் பெயர் கூட வேலை உடையவன் என்ற பொருளில் அமைகிறது. குறிஞ்சி நிலமானது வேட்டைச் சமூகத்தை உடையது. அம்மக்கள் வேட்டைத் தொழிலுக்குப் பயன்படுத்தும் கருவி வேல் ஆகையால், அக்கருவியே அத்தெய்வத்திற்கு குறியீடாக அமைந்திருக்கக்கூடும்

## குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன்

**'குன்றிருக்கும் இடமெல்லாம் குடிக்கொண்டு அருளும் குமரன்'** என்னும் பழமொழி இன்றளவும் முருகக் கடவுள் மலை மீதே அமைந்திருப்பதாகவே பெரும்பாலும் அறிய முடிகிறது. ஏனெனில் குறிஞ்சி நிலமான மலையும் மலை சார்ந்த பகுதி முருகனுக்கு உகந்த மலை என்பதை

**கறம்புணை ஆகத் தோற்றிப் பிறங்குமலை**
**மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு**

(குறிஞ்சிப்:வ.208-209)

எனும் வரிகளால் முருகக் கடவுள் மலை மீது வீற்றிப்பதை உணர்த்துகிறது. மேலும் முருகனின் கோவிலுக்கு அணங்குடை முருகன் கோட்டம் எனப்பட்டது.

## முருகனின் உருத்தோற்றம்

முற்காலத்தில் தமிழ்க்கடவுளாய் முருகனை வழிப்பட்டனர். அவன் தாமரை மலரைப் போன்ற திருவடியையும் பவளத்தை ஓத்த சிவந்த நிறத்தையும் விளங்குகின்ற ஒளியையும் குன்றி மணியினை ஒக்கும் சிவந்த ஆடையையும் கிரவுஞ்ச மலையினது நடுவிடம் பிளக்கும்படி வீசிய அழகிய ஒளியையுடைய நெடிய வேற்படையும் சேவற்கொடியையும் உடையவன்

**தாமரை புரையும் காமர் சேவடி,**
**பவழத்து அன்ன மேனி, திகழ் ஒளி,**
**குன்றி ஏய்க்கும் உடுக்கை குன்றின்**

நெஞ்சு பக எறிந்த அம் சுடர் நெடு வேல்
சேவல்அம் கொடியோன் காப்ப

என்ற வரிகளின் மூலம் முருகப்பெருமானின் தோற்றத்தை பாரதம் பாடிய பெருந்தேவனார் குறுந்தொகையில் கடவுள் வாழ்த்து பாடல் மூலமாக குறிப்பிட்டுள்ளார்.

## அடையாள மாலை

முருகனுக்குரிய மாலைகளுள் கடம்பு மிகவும் உகந்தது. ஆதலின் முருகனின் பெயர் கடம்பன் எனவும் முருகனின் திருத்தலம் கடம்பந்துறை எனவும் குறிப்பதை காணலாம்

கடம்பமர் நெடுவே ளன்ன மீளி (பெரும்பாண்,வ.75)

கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய் (நற்,பா.34:வ.8-9)

உருகெழு சிறப்பின் முருகு மனைத் தரீஇ
கடம்பும் களிறும் பாடி (அகம்,பா.138:வ.10-11)

கார்நறுங் கடம்பன் பரிசிலைத் தெரியல்
சூர்நவை, முருகன் சுற்றத்தன்ன (புறம்,பா.23:வ.3-4)

போன்ற இலக்கியச் சான்றுகள் முருகனுக்கு உகந்த மாலையானது கடம்ப மலர் என உறுதிப்படுத்துகிறது.

சேவற் கொடியும் மயில் வாகனமும் முருகப் பெருமானின் அடையாளமாகத் திகழப் படுகின்றதை பின் வரும் சான்றாதாரங்கள் எடுத்தியம்புகின்றது.

பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ (திருமுருகு,வ.122)

சேவல் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி மயிலலங்கடையே (தொல்,பொ,மரபு,நூ.593)

விறல் வெய்யோன் ஊர்மயில் வேல் நிழல் நோக்கி
(பரி,பா.8:வ.64)

## திருமுருகாற்றுப்படையில் முருகனின் சிறப்பு

பத்துப்பாட்டில் முதலாவதாகக் கூறப்படும் நூல் திருமுருகாற்றுப்படையாகும். இப்பாடலை பாடியவர் நக்கீரர். முருகக் கடவுளின் பிறப்பு, பன்னிரு கரங்களின் சிறப்பு, சூரபத்திரன் எனும் அசுரனை அழித்த வரலாறும், முருகக் கடவுளின் ஆறுபடை வீடுகளையும் அவற்றின் சிறப்பையும்

எடுத்தியம்புகிறார். தமிழ்க் கடவுளாகக் போற்றப்படும் முருகனை வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

**ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை**
**மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே!**
**வெற்றிவேல் கொற்றவை சிறுவ!(திருமுருகு,வ.256-258)**

என்னும் வரிகளின் முருகனை ஆல்கெழு கடவுட் சிறுவன், கொற்றவைச் சிறுவன், குறிஞ்சிக் கிழவன், என பல்வேறு நாமத்தில் நக்கீரர் அழைக்கிறார் என்னும் செய்தி இங்கு குறிப்பிடப்படுகிறது.

## முடிவுரை

மேற்கண்ட வகையில் கூறப்பட்டுள்ள செய்தியானது சங்க கால முருகனின் தொல்லியல் சான்றுகளும்இஉருவ வழிபாடு செய்திகளும், குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் வீற்றிருப்பதையும், உருத்தோற்றம், அடையாள மாலை, திருமுருகாற்றுப்படையில் முருகனின் சிறப்புகளும், சங்க காலம் முதற்கொண்டு இக்காலம் வரை முருக வழிபாடு நடைபெறுவதை அறியமுடிகிறது.

**X X X**